## 29.18 கூடுதலாக பணிகள் வரையறுத்தல் மற்றும் மதிப்பூதியம் வழங்குவதற்காக தற்பொழுது உள்ள நடைமுறையை மாற்றி அமைத்தல்

---

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண். 30 நாள் : 09.02.1999

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.50, ஊரக வளர்ச்சி நாள்–24.02.1997
2. அரசுக் கடிதம் எண். 10030/மதி1/97, ஊரக வளர்ச்சி நாள்–22.8.97
3. அரசாணை (நிலை) எண்.277, ஊரக வளர்ச்சி நாள்–10.09.1997
4. ஊரக வளர்ச்சி இயக்குநரின் நே.மு.க..எண்.21540/98/எச்.3, நாள்–13.08.98

**ஆணை**

மக்கள் நலப்பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு பணிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

1. ஊராட்சி தொடர்பாக அனைத்து அடிப்படை விபரங்களை பராமரித்தல்.
2. பூங்காக்கள், சமூகக்காடு மற்றும் குட்டைகள் போன்ற கிராம பொது சொத்து ஆதாரங்களை பராமரித்தல்.
3. அருகில் உள்ள பொது நூலகத்திலிருந்து கிராம நூலகப் பணியினை விரிவாக்கல்.
4. கிராமங்களில் உள்ள குடிநீர் கைப்பம்பு பராமரிப்பில் கூடுதல் பாதுகாவலராக பணிபுரிதல்.
5. சிறுசேமிப்பு பணிக்கு முகவராக இருத்தல். இப்பணிக்கு தனியாக முகவர் ஊக்க ஊதியம் பெற்றிட தகுதியுள்ளவராவார்.
6. மின்சார வாரியத்திடம் தொடர்பு கொண்டு தெரு விளக்குகளை பராமரித்தல்.
7. ஊரக வளர்ச்சி இயக்குநரால் வரையறுக்கப்படும் ஏனைய பணிகள்.
8. மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் மக்களிடையே பரப்பி விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
9. முதியோர் கல்வி – முறைசாரா கல்வி ஊக்கப்படுத்துதல்.
10. குடும்பநல மற்றும் தடுப்பு ஊசி திட்டங்களை ஊக்கப்படுத்துதல்.
11. சத்துணவு திட்டப் பணிகளுக்கு உதவி புரிதல்.
12. மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப்பணிகள் (மக்கள்நல பெண் பணியாளர்கள் மட்டும்)
13. கிராமங்களில் அமைதியைப் பேணிக் காக்க உதவி புரிதல் மற்றும்
14. அரசுத் திட்டங்களை மக்களிடம் பரப்புதல்.

2.பார்வை மூன்றில் குறிப்பிட்டுள்ள அரசாணையில் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மக்கள் நலப்பணியாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் மதிப்பூதியம் வழங்குவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டது.

3.ஊரக வளர்ச்சி இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மாநில நிதி ஆணையத்தால் அளிக்கப்படும் மானியம் மட்டுமின்றி கூடுதலாக மக்கள் நலப்பணியாளர்களுக்கு மதிப்பூதியம் வழங்குவதற்காக ஏற்படும் செலவிற்கான நிதியை மானிய உதவித் தொகையாக (Grants-in-aid) கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கலாம் என்றும் இவ்வாறு விடுவிக்கப்படும் நிதியை பெற்று கிராம ஊராட்சி நிதிக் கணக்கில் வைப்பதற்கும் அதிகாரம் அளிக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் மக்கள் நலப்பணியாளர்களுக்கு தற்பொழுது வட்டார வளர்ச்சி அலுவலர்களால் மதிப்பூதியம் ஒவ்வொரு மாதமும் வழங்கப்படும் முறையை மாற்றி கிராம ஊராட்சித் தலைவர்களே அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் நலப்பணியாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் மதிப்பூதியத்தை வழங்கலாம் என்றும் இத்தகைய நடைமுறை ஊராட்சி மன்றத் தலைவர்கள் மக்கள் நலப்பணியாளர்களின் பணிகளை நேரிடையாக கட்டுப்படுத்துவதற்கும் வழிவகுக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

4.மேலும் அவர் மக்கள் நலப்பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு கூடுதல் பொறுப்புகளை வழங்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

1. வரிகேட்பு மற்றும் இது தொடர்பான ஆவணங்கள் தயாரிப்பதற்கு உதவுதல்.
2. வரி வசூலித்தல், பஞ்சாயத்துக்களுக்கான நிதி வருவாய், ரசீது புத்தகங்கள் மற்றும் இது தொடர்பான ஆவணங்கள் பராமரித்தல் ஆகியவற்றிற்கு உதவுதல்.
3. ஊராட்சி ஒன்றியங்களின் சார்பாக அபாயகரமான வணிகங்களுக்கான கட்டணத்தை வசூலிப்பதற்கு உதவுதல்.
4. கிராம ஊராட்சிப் பணிகளின் செயலாக்கத்தில் குறிப்பாக குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள் பராமரித்தல், சாலைப் பணிகள் மற்றும் மத்திய மற்றும் மாநில திட்டங்களை செயல்படுத்துவதில் உதவுதல்.
5. கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சி பதிவேடுகள் (படிவங்கள் 1–31) மற்றும் பஞ்சாயத்து சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகள் மற்றும் பஞ்சாயத்திலுள்ள புறம்போக்கு நிலங்கள் பற்றிய பதிவேடுகளை பராமரிப்பதில் உதவுதல்.

5. முன்பத்தி நான்கில் உள்ள ஊரக வளர்ச்சி இயக்குநரின் மக்கள் நலப்பணியாளர்களுக்கு கூடுதலாக பணிகளை வரையறுப்பது மற்றும் மதிப்பூதியம் வழங்குவதற்காக தற்போதுள்ள நடைமுறையை மாற்றியமைப்பது குறித்த கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

இந்த ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வருகிறது.

1. ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை ) எண். 277, நாள்–10.9.97ல் பத்தி 3ல் வெளியிடப்பட்ட ஆணைகள் இந்த ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து நீக்கப்படுகிறது.
2. மக்கள் நலப் பணியாளர்களுக்கு தற்பொழுது அளிக்கப்பட்டுள்ள பணிகளுடன் முன்பத்தி நாளில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளும் கூடுதலாக அளிக்கப்படுகிறது.
3. மக்கள் நலப்பணியாளர்களுக்கு தற்பொழுது அளிக்கப்பட்டுள்ள கூடுதல் பணிகளை செயல்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
4. மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மாநில நிதி ஆணையத்தால் அளிக்கப்படும் மானியம் மட்டுமின்றி கூடுதலாக மக்கள் நலப்பணியாளர்களுக்கு மதிப்பூதியம் வழங்குவதற்காக ஏற்படும் செலவிற்கான நிதியை மானிய உதவித்தொகையாக (Grant-in-aid) கிராம ஊராட்சிகளுக்கு விடுவிப்பதற்கும் இவ்வாறு விடுவிக்கப்படும் நிதியை கிராம ஊராட்சி நிதிக் கணக்கில் வைப்பதற்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

5. மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு, மக்கள் நலப்பணியாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியத்திற்கான செலவுத் தொகையை பெற்று காலாண்டு அடிப்படையில் ஜனவரி, ஏப்ரல், ஜுலை மற்றும் அக்டோபர் மாதங்களில் கிராம ஊராட்சி நிதிக் கணக்கில் பற்று வைப்பதற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. கிராம ஊராட்சித் தலைவர்கள் மக்கள் நலப்பணியாளர்களுக்கு மதிப்பூதியத்தை மாத அடிப்படையில் வழங்குவதற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6.இந்த ஆணை வெளியிடப்படும் முன்னர் மக்கள் நலப்பணியாளர்களுக்கு மதிப்பூதியத்திற்கான செலவினம் கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட்டு வந்தது.

> "2515–00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் –800 –ஏனையச் செலவு– ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JQ – படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் ஊராட்சி ஒன்றிய மக்கள் நலப்பணியாளர்கள் வேலை வாய்ப்புத் திட்டம் 33 – தொழில் முறை சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல் (த.தொ.கு.2515–00–800–JQ–3308)"

இந்த ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து மக்கள் நலப்பணியாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியத்திற்கான செலவினம் மேற்கண்ட கணக்குத் தலைப்பிலேயே "33 – தொழில் முறை சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல்" என்ற கணக்குத் தலைப்பிற்குப் பதிலாக "09 – உதவி மானியங்கள்" என்ற புதிய கணக்குத் தலைப்பின் (Detailed head of account) கீழ் பற்று வைக்கப்படவேண்டும். (த.தொ.கு.2515–00–800–JQ–0909)

7.தேவையான நிதி ஒதுக்கீடு இறுதி திருத்திய மதிப்பீட்டில் 1998–99 மறு நிதியொதுக்கம் மூலம் (Re-

appropriation) ஒதுக்கப்படும். அவ்வாறு நிதி ஒதுக்கப்படும் வரை ஊரக வளர்ச்சி இயக்குநர் மேற்படி தொகையை பெற்று அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்க அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் ஊரக வளர்ச்சி இயக்குநரை 1998–99க்கான இறுதி திருத்திய மதிப்பீடு அரசுக்கு அனுப்பப்படும்போது மேற்கண்ட செலவினத்தையும் சேர்த்து அனுப்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

8.இந்த அரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.6426/ஊ.வ./ 93 –1 ,நாள்–01.02.99ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்